

பாமாலை 666 வெளியில் ஊரில் யாவும்

1 வெளியில் ஊரில் யாவும்
எல்லா ஜீவாத்துமாவும்
இப்போதமர்ந்தது
என் மனமே நீ பாடி
உன் கர்த்தரைக் கொண்டாடி
ஜெபத் தியானமாயிரு

2 உறக்கத்தால் கண் மூடும்
இருட்டும் என்னைச் சூழும்
நீரோ என் ஸ்வாமியே
என் ஆவி தேகத்துக்கும்
சதி வராதிருக்கும்
படிக்கென்னைத் தற்காப்பீரே

3 அடுத்தவர்கள் மீதும்
இராவில் கெடுந்தீதும்
வராமல் யாவரும்
அருள் நிழலின் கீழே
சுகித்துத் தூங்க நீரே
அன்பாகக் கட்டளையிடும்.